நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ... து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 07 திங்கட்கிழமை (23-09-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 293

# ஐ. தே. க. பெரும்பான்மை இழந்தால் சிறிமாவைப் பிரதமராக்குவேன்!

## ஜனாதிபதி பிரேமா அறிவிப்பு

### அதிருப்தியாளர்களை மிரட்டுகிறார்

கொழும்பு, செப்டெம்பர் 23

நாடாளுமன்றத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை வலுவை இழந்தால், எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை பிரதமராக நியமிப்பேன். ஐ. தே. கவிலிருந்து வெளியேறிய அதிருப்தியாளர் குழுவினர் அப்போது என்ன செய்வார்கள்?

இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா.

நேற்று முன்தினம் நடைபெற்ற கொழும்பு மத்திய ஐ. தே. க. செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கேட்டார்.

ஐ. தே. கவிலிருந்து விலகி நிற்கும் அதிருப்தியாளர் குழுவில் தற்சமயம் பதினொரு எம். பிக்கள் வரை உள்ளனர். மேலும் சில எம். பிக்கள் ஐ. தே. கவை விட்டு விலகி அதிருப்தியாளர் குழுவுடன் சேர்ந்தால் நாடாளுமன்றத்தில் ஐ. தே. க. பெரும்பான்மை இழக்கும் நிலை உருவாகும்.

பெரும்பான்மை இழந்த அரசு, முக்கிய நிதி சம்பந்தமான சட்ட மூலங்கள் அல்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர் பலி!

நீருக்கு மேலால் பாய்ந்து வந்த சிலா மீன் ஒன்று நெஞ்சில் குத்தியதால் மீனவர் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அரியாலை பூம்புகார் கடற் பகுதியில் நேற்றுக் காலை 5-30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

வீரசத்தி செல்வம் [வயது 32] என்பவரே இறந்தவராவார். இவர் மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் வசித்து வந்தார். [த-15]

## பிரேமாவுக்கு எதிரான பிரேரணை புதன்கிழமைக்குப் பின்னரே சபையில்?

கொழும்பு, செப். 23

நாடாளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் நாளை காலை 10:40 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும் என நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைப்பது மற்றும் கூட்டுவது பற்றிய ஜனாதிபதியின் பிரகடனத்தை நாளை காலையில் சபை கூடியதும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வாசிப்பார்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துவார்.

நண்பகல் 1. 30 மணியளவில் ஜனாதிபதியின் உரை முடிவுற்றதும் சபை அமர்வு இடைநிறுத்தப்படும்.

அடுத்தநாள் [புதன்கிழமை] காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், பின்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சில எம். பிக்கள் பிரேமாவை அவமானப்படுத்த முயல்வர்?

கொழும்பு, செப். 23

நாளை நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி பிரேமதாஸா பேசும் போது, அவரை அவமானப்படுத்தும் விதத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளக் கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி அவர்கள் நடந்து கொண்டாலும் திரு பிரேமதாஸ விற்கு விசுவாசமான எம். பிக்கள் அமைதியைக் காத்து, பொறுமையுடன் சகித்து நடக்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் வின்சென்ட் பெரேரா தமது கட்சி எம். பிக்களைக் கேட்டுள்ளார். [உ-எ]

## ஜனாதிபதி - சபாநாயகர் 2 மணி நேரம் சந்திப்பு

ஜனாதிபதி பிரேமதாஸாவை சபாநாயகர் எம். எச். முஹம்மது கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில் சந்தித்துப் பேசினார்.

சபாநாயகரின் வேண்டுகோளின்படி ஒழுங்கு செய்யப்பட்ட அச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இரண்டு மணி நேரம் வரை நீடித்தது.

ஜனாதிபதி பிரேமதாஸா மீது அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை கொண்டு வரப்பட்ட பின்னர் சபாநாயகர் ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசியது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது. [த-எ]

## ஜீ. சீ. ஈ. பரீட்சை முடிவுகள்; வேம்படி மகளிர் முன்னணி!

யாழ்ப்பாணம், செப். 23

ஜி. சீ. ஈ. [உயர்தரம்] —1990 விசேட பரீட்சையின் முடிவுகள் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு நேற்றுக் கிடைத்தன.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றனர். அந்தப் பாடசாலையின் நான்கு மாணவியர் நான்கு பாடங்களிலும் அதி விசேட (4 A) சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். இந்து, சென் ஜோன்ஸ், உடுவில் மகளிர், யாழ். இந்து மகளிர், கொக்குவில் இந்து, ஹாட்லி கல்லூரி மாணவர்களும் நான்கு பாடங்களில் அதி விசேட சித்திகளைப் பெற்றிருக்கின்றனர்.

நேற்று வெளியான பரீட்சை முடிவுகளில் கலைப் பிரிவில் ஒரு சில பாடங்களுக்கான பெறுபேறுகள் இடம்பெறவில்லை. இந்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க ராணுவ உதவி ஸ்ரீலங்கா அரசு கேட்கிறது!

அமெரிக்காவிடம் இருந்து அதிகளவு இராணுவ மற்றும் நிதி உதவிகளை ஸ்ரீலங்கா அரசு கோரியிருப்பதாக ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

இது தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருப்பதாக நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர் என்று அச் செய்தியில் மேலும் கூறப்பட்டது.

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருக்கு அமெரிக்காவில் மேலும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குமாறு அரசு கோரியிருப்பதாகவும்—

ஸ்ரீலங்காப் படைகளுக்கு உபகரணங்களை அமெரிக்காவிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் பற்றி ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்புப் படையினருக்குரிய பல்வேறு கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதி மற்றும் லைசன்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய இரா

[3 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப... பெண்மணிகள் தான் ... துணிவை......

## விமான எதிர்ப்புப் பீரங்கிகளை புலிகளுக்கு பிரேமா வழங்கினாராம்!

மணிலா, செப். 23

தமிழ் தேசிய இராணுவத்திடம் தாக்குதல் நடத்த விமானங்கள் இல்லாத நிலையில் கூட, விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு பீரங்கிகளை ஜனாதிபதி பிரேமதாஸா வழங்கியிருக்கிறார்.

—இவ்வாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி செய்தியாளர் மாநாட்டில் குற்றம் சாட்டியதாக வெரித்தாஸ் வானொலி தகவல் வெளியிட்டது.

அத்துலத் முதலி மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியதை ஜனாதிபதி பிரேமதாஸா ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலக இதுவே போதுமானது.

விடுதலைப் புலிகளுக்கு மாத்திரமல்ல, ஏனைய கட்சிகள், தமிழ், முஸ்லிம் அமைப்புகளுக்கும் கூட ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று அண்மையில் ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்திருந்தார்.

மற்ற கட்சிகள், இயக்கங்கள் ஜனநாயக அமைப்புக்கு உட்பட்டவை. அவற்றிற்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டது தவறல்ல.

ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக விரோத போக்குடையது. தனி இராஜ்யம் கோரும் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டமை, சட்ட விரோதமானது, கண்டிக்கத்தக்கது.

விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதன் மூலம் அரசமைப்புக்கு முரணாக, பிரிவினை வாதத்திற்கு ஜனாதிபதி பிரேமதாஸா துணைபோயிருக்கிறார்.

புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியது பற்றி அமைச்சரவையிடமும் அரச நாடாளுமன்றக் குழுவிடமும் ஜனாதிபதி கூறாமலிருந்தது அரசமைப்புக்கு முரணானது. அரசமைப்புச் சட்டத்தை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேச வர்த்தகம்: ஆபத்து நாடுகள் பட்டியலில் இலங்கையும் சேர்ப்பு!

சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆபத்தாக கருதப்படும் நாடுகளின் கறுப்புப் பட்டியலில் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக ''போர்ச்சூன்'' சஞ்சிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பட்டியலில் ஏழாவது இடத்தை இலங்கை இடம் பெற்றிருக்கிறது.

ஏனைய நாடுகளின் விபரம் வருமாறு:- பெரு, எல்சல்வடோர், இந்தியா, துருக்கி, கொலம்பியா, பிலிப்பீன்ஸ், வடஅயர்லாந்து, ஸ்பெயின், நிக்கரகுவா. (உ-எ)

## தொண்டா விரைவில் யாழ். வருவார்?

யாழ்ப்பாணம், செப். 23

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் தொண்டமான் விரைவில் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று இத்தகவலை வெளியிட்டது.

இதற்கிடையில்—

தாம் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்திற்கு இன்னும் ஒரு வார காலத்திற்குள் பதிலை எதிர்பார்ப்பதாக அமைச்சர் தொண்டமான் கூறியிருக்கிறார்.

தமது கடிதத்தில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்களைத் தொடங்கத் தேவையான அடிப்படைக் கோரிக்கைகளில்—

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவில்லை என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார் என்று ''சண்டே ரைம்ஸ்'' நேற்று செய்தி வெளியிட்டது. [உ-எ-3]

## ராஜீவ் கொலைச் சம்பவம்; புலிகள் மீது குற்றப்பத்திரம்

### நீதிமன்றில் விரைவில் தாக்கல்!

புதுடில்லி, செப். 23

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் இயக்கமே படுகொலை செய்தது என்று குற்றஞ்சாட்டும் இறுதிக் குற்றப்பத்திரிகையை தாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதாக விசேட புலனாய்வுக் குழு அறிவித்திருக்கிறது.

இதற்காக போதுமான தடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. புலிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு அவை போதுமான ஆதாரங்கள் என்றும் விசேட புலனாய்வுக் குழு கூறியுள்ளது.

ராஜீவ் காந்தியை கொலை செய்வதற்கான உத்தரவு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனாலேயே வழங்கப்பட்டது என்பதையும்—

புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவின் தலைவரான பொட்டு அம்மானின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### நாளை நாடாளுமன்றுக்கு வரும்

## பிரேமாவிடம் கேள்விகளை எதிரணியினர் எழுப்புவர்!

நாளை நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி சபைக்கு வரும்போது அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்க எதிர்க்கட்சி எம். பிக்களும், ஐ. தே. க. அதிருப்தியாளர்களும் தயாராகி வருகின்றனர்.

ஐக்கிய சோசலிச அணியின் எம். பி அத்தாவுட செனவிரத்ன இத்தகவலை

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பாவித்த ஸ்பிறிங் மெத்தைகள், ஆர்பிக்கோ சேஸ்ரா மெத்தைகள், பாவித்த மரத் தளபாடங்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்படும். ஸ்பிறிங் வலைகள் தனியாகவும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். இல. 234, K. K. S வீதி, யாழ்ப்பாணம் M/S (வைத்திலிங்கம் & கம்பனிக்கு அருகாமையில்) காலை 9-00 மணி தொடக்கம் 2-00 மணி வரை. [18216]

---

தமிழ் தட்டெழுத்தாளர் உடனடியாகத் தேவை. ஆங்கிலத் தட்டெழுத்தும் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்: செயலாளர், வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி. [18218]

---

லக்ஸ்பிறே, ஹைலண்ட் மற்றும் பாலமா வெற்று ஈயப்பைகள் நல்ல நிலைமையில் சேர்ப்பித்து பைஒன்றுக்கு -/10 சதம் வீதம் பெற்றுக் கொள்ளுங்கள். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-0571]

### மணமகள் தேவை

யாழ். இந்துப் பெற்றோர் கனடா வங்கியில் உயர் அதிகாரியாகத் தொழில் புரியும் 41 வயது மகனுக்கு படித்த மணமகளை எதிர் பார்க்கின்றனர். விவாகரத்து செய்தவர்களும், தாரமிழந்தவர்களும் விரும்பின் விண்ணப்பிக்கலாம். இல. 355, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [18223]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைசுாலவியல், குதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4265]

### சோதிடம்

கல்வித்தடை, விவாகத் தடை, தொழில்த்தடை மற்றும் எல்லாவித கஷ்டங்களும் நீங்கி அதிர்ஷ்டத்துடன் வாழ நேரில் வரவும். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், 146, பருத்தித்துறை றோட், [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். [18196]

---

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் முற்பிறப்பு - சீரடி சாயி பாபா வரலாறு [சிவ தோத்தமும் முற்பிறவி வண்ணப் படங்களுடன்] ரூபா 10/- செல்வாய், வியாழமாற்றங்கள் ரூ 6/50. எங்கும் விற்பனையாகின்றன. சோபிதா புத்தகசாலை, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். நூலாசிரியர் Prof: சத்தியதாசன், ஞானாலயம், சித்தன்கேணி. [18226]

### ரைப்ரைட்டர்

Typewriters டைட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0533)

### A/L கணக்கியல் கோட்பாடுகள்

உயர்தர வகுப்புக்குரிய கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டன. ஆக்கியோன் N. ராஜுக், B Com விலை; 35/-. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [சி-0653]

### தவறிவிட்டது

பராராஜசிங்கம் வினோராஜ் பலாலி தெற்கு வயாவிளான் என்ற விலாசமிடப்பட்ட அடையாள அட்டை பேர்சுடன் 19 - 9 - 91 இல் கோப்பாய்க்கும், நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது மவர் வாசா, உரும்பராய் கிழக்கு உரும்பராய் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [18219]

### புதிய மீரா நாவல்கள்

பரிசளிக்கக்கூடியவை, இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை, சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை' இன்னும் உயிரோட்டமான பத்து 'மீரா நாவல்கள்' விற்பனையாகின்றன. [4303]

---

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

6ஆம் ஆண்டு அனுமதிப்பரீட்சைகளுக்கான முன் மாதிரிப் பயிற்சிப் பரீட்சை
(தமிழ், கணிதம், ஆங்கிலம்)

ஒவ்வொரு - ஞாயிறும் பிற்பகல் நடைபெறும்.

**BOND**

புத்தக நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4305]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ். ரி மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம் (4285)

### க. பொ. த. (உ/த) மீளாய்வுப் படிவம்

க. பொ. த. [உ/த] மீளாய்வுப் படிவம் (ஆகஸ்ட் 90) விற்பனைக்குண்டு. அருண் அச்சகம், (ஷட்றா நிதி நிறுவனத்திற்கு அருகில்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/0574]

---

PHYSICS
திரு. அருள்தாஸ் B. Sc.

சனி — ஞாயிறு

9-00 Heat
10-00 Paper Class (Sound)
11-00 Electricity

***BOND***

கல்வி நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[4304]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 12 08-1950

உதிர்வு: 10 08 1991

திதி: 23 09 1991

திருமதி
## இந்திராதேவி அருளானந்தம்

சிலம்பொலியுஞ் செம்முகமும் சேர்விருந்து வரவேற்பும்
தவம்பெருக்குந் தண்ணொளியும் தருக்கிலாக் கீழ்ப் பணிவும்
அவம்போக்கும் நன்நெஞ்சும் அசைவில்லா நாற் குணமும்
இவளொருத்தி எனவாழ்ந்தாள் எம் இந்திரா தேவியாமே.

நினைவு மறவாத நெஞ்சங்கள்,
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

இராச வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(18220)

---

## Tiny Tots Corner
Chavakachcheri.

### சிறுவர் பாடசாலை

பயிற்சி பெற்ற ஆங்கில அறிவுள்ள ஆசிரியை தேவை. முன் அனுபவம் உள்ளவருக்கு முதலிடம் அளிக்கப்படும்.

Bio Data உடன் 27 – 09 – 1991 க்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

TINY TOTS CORNER
C/O P. O. BOX - 3,
CHAVAKACHCHERI.

[18203]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
## பெலிசிற்றஸ் இம்மனுவேல்

23 - 09 - 1990

'ஓராண்டு போய்ப் பல்லாண்டு வந்தாலும் நின் நினைவு எம்மை விட்டகலாது' என்றும்,

இறைவனின் சந்நிதியில் சாமாதானத்தில் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மகள்,
உற்றார், உறவினர்கள்.

சில்லாலை.

(4308)

---

# இதோ!
# அறிமுகப்படுத்துகின்றோம்.

விரைவில் இந்த இடத்தில்
ஓர் உள்ளூர் உற்பத்தி
நீங்களே! மூக்கின் மேல் விரலை வைப்பீர்கள்.

தயாரிப்பு:
யாழ். மாநகர தெங்கு - பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.

விளம்பர வடிவமைப்பு:
செவித் ஜோ. எகட்டன்.

(18197)

---

# போர் முனை - உணவு உற்பத்தி

## தமிழீழ மக்களே!

தொடர்ந்தும் நாம் எமது உணவுக்காக கையேந்த முடியுமா?
அரசின் உணவு விநியோகம் முற்றாகத் தடைப்பட்டால்.....?

சிந்தியுங்கள், செயற்படுங்கள்.

பயிர்ச் செய்கைக்கான பருவ காலம் வருகிறது.

எம்மிடம்

★ நிலம் உண்டு,
★ மனித வளம் உண்டு,
★ பொருள் வளமும் முற்றாக அழிந்துவிடவில்லை.

எம் மக்களது வயிற்றுப் பசியைப் போக்க காலபோக விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கமாக உழைக்கும் ஆற்றலுடன் தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஓர் அங்குல நிலத்தைத்தானும் வீணாக்காது பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தும் எமது திட்டம் வெற்றி பெற;

நிலமுடையவர்கள் தம்மிடமுள்ள செய்கை பண்ணப்படாத நிலத்தை எமக்கு காலபோகச் செய்கைக்கு தற்காலிகமாக வழங்கியும், —

பொருள் உதவி செய்ய விரும்புபவர்கள் தம்மால் இயன்ற உதவியை 6 மாதகால கடனுதவியாக பொருளாதார வசதியற்றவர்களுக்கு எமக்கூடாக வழங்கியும் உதவுமாறு வேண்டுகிறோம்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவும்,
எமது விடாமுயற்சியில் முன்னேற்றமும்,
மக்களின் பசியைத் தீர்ப்பதில் வெற்றியும் காண —

காலத்தை தவறவிடாது
உற்பத்திப் பெருக்கத்தில்
ஒன்றுபட்டுச் செயற்படுவோம்!



## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,

83/2, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

[சி-0573]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

# அடித்தளத்தை பாதுகாப்போம்!

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிஷன் நிறுவப்பட்ட 175 ஆவது வருட நிறைவு விழா இன்று வட்டுக்கோட்டையில் கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்த நன்மைகளில் அமெரிக்க மிஷனரிமாரின் வருகையும் ஒன்று என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். விவசாயம், வர்த்தகம் உட்பட, பொருளியல் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருந்தார்கள். எனினும் வெளிநாட்டார் ஆக்கிரமிப்பின் பின்னர் மந்த நிலையும், தேக்க நிலையும் உண்டாகின.

தமிழரசு வீழ்ச்சி கண்ட பின்னர் தமிழர்களின் கல்வித்துறை மறுமலர்ச்சிக்கும் அதன் மூலம் பொருளாதார, சமூக மேம்பாட்டுக்கும் பெருமளவில் வழி சமைத்தது அமெரிக்க மிஷனரி எனலாம்.

எங்கள் பிரதேசத்துக்கு வந்த வெளிநாட்டவர்களின்- மேற்கு நாட்டவர்களின்— பிரதான நோக்கம் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதாகவே இருந்தது. எனினும் அந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, சமூக வளர்ச்சிக்கான ஏனைய துறைகளிலும் அவர்கள் தமது பணிகளைப் பரவினர்.

கல்வி வளர்ச்சியே யாழ்ப்பாண மக்களின் ஏனைய சமூக, பொருளாதார முன்னேற்றங்களுக்கும் அத்திவாரமாக அமைந்தது. இன்றுவரையும் கல்வியே யாழ்ப்பாணத்தவர்களின் பெரும் சொத்தாக விளங்கி வருகிறது.

கல்வி எங்கள் சமூக அடித்தளமாக விளங்கும் பாரம்பரியம் வளர்ந்து மேலோங்கியதாலேயே, தமிழர்கள் பல கஷ்டங்களையும், நெருக்கடிகளையும் எதிர்நோக்கியும், அவற்றுக்கு முகம் கொடுத்தும் தாக்குப் பிடித்து வாழ முடிகிறது.

கல்வியில் மேம்பட்ட காரணத்தினாலேயே அவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாகவும், ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும், எதிராகப் போராடும் சக்தி படைத்தவர்களாகவும் விளங்குகிறார்கள். அறிவே துணையாக நின்று அவர்களுக்குத் துணிவையும், வல்லமையையும் ஊட்டுகிறது.

தமிழ் மக்கள் தமது இழந்த சுதந்திரத்தை, இறைமையை மீளப் பெறுவதற்காக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் காலம் இது. இந்தப் போராட்டத்துக்கான அரசியல் விழிப்புணர்ச்சிக்கு தமிழர்களை ஆற்றுப்படுத்தியதே கல்வி வளம் தான்.

அதனால் தான் சிங்கள அரசுகள் தமிழர்களின் கல்வித் தளத்தை உடைத்துவிட்டு அவர்களை அரசியல் அடிமைகளாக வைத்திருப்பதற்கு கடந்த நான்கு தசாப்தங்களாக முயன்று வருகின்றன. அதற்கான பல சூழ்ச்சிகளையும் செய்து வருகிறது.

எனவே, அரசியல் போராட்டம் வெற்றியடையவும், சமூக பொருளாதார சுதந்திரங்கள் பரிணமிக்கவும், ஈழத்தமிழர் கல்வி வளம் நலிவடைந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்; பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கல்வித் திறவுகோலை யாழ்ப்பாணத்துக்கு அளித்த அமெரிக்க மிஷனரியின் 175 ஆண்டு நிறைவு தினத்தில் கல்வி வளத்தை மேலும் பல்கிப் பெருகச் செய்ய திடசங்கற்பம் செய்வோமாக.

# திலீபன் நினைவுக் கூட்டங்கள்

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவை முன்விட்டு குடாநாட்டில் இன்று பின்வரும் இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

★ வலிகாமம் பகுதிக்கான கூட்டம் கோப்பாய் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் இரவு 7 மணிக்கு.

★ தீவகப் பகுதிக்கான கூட்டம் புங்குடுதீவு மத்தி ஊரதீவு மைதானத்தில் மாலை 6.30 மணிக்கு.

★ வடமராட்சிக்கான கூட்டம் பொற்பதியில் பிற்பகல் 2 மணிக்கும், மணற்காடு தேவாலயத்தில் பிற்பகல் 3 மணிக்கும்.

★ தென்மராட்சிக்கான கூட்டம் மந்துவில் சிறீகாந்தன் ச. ச. நிலையத்தில் இரவு 7 மணிக்கு. (த)

## திலீபன் நினைவாக நல்லூரில்

# காரைநகர் வாசி 4 நாட்கள் தொடர் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபனின் நான்கு ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, இன்று திங்கள் முதல் வியாழன் வரை —நான்கு நாட்கள் காரைநகர் வாசி ஒருவர் நீராகார மற்ற மௌன விரதம் அனுஷ்டிக்க உள்ளார்.

ந. தருமராசா என்னும் இவர் நல்லூர் வீதியில் இன்று மாலை 5 மணிக்கு உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கஇருக்கிறார். (ஒ)

# பாடசாலை மட்டத்திலும் திலீபன் நினைவு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபன் நினைவு நாட்களில் யாழ். மாவட்ட பாடசாலை மட்டத்தில் கவிதை, கட்டுரைப் போட்டிகள் மற்றும் சிரமதான நிகழ்ச்சிகள் போன்றவை நடைபெற்று வருகின்றன.

நாளை, சென்யேம்ஸ் கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளின் திலீபன் நினைவுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதே தினத்தில் வட்டு. திருஞானசம்பந்தர் பாடசாலை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றிலும்—

நாளை மறுதினம் யாழ். இந்துக் கல்லூரியிலும் திலீபன் நினைவு தினம் கொண்டாடப்படவுள்ளது. (ஒ)

## பருத்தித்துறையில் திலீபன் நினைவாக அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 23

தியாகி திலீபனின் நான்காம் ஆண்டு நினைவாக— அவரது நினைவு நாட்களின் பத்தாவது நாளான நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோவில் முன்றலில் மாபெரும் உண்ணா விரதமும், அஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளன.

மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள அஞ்சலிக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் பலர் உரையாற்றவுள்ளனர். [த]

## முகாமைத்துவ பயிற்சி நெறி

மானிப்பாய், செப். 23

யாழ். மாவட்ட பாடசாலைகளின் பிரிவுத் தலைவர்களுக்கான முகாமைத்துவ பயிற்சி, இன்று முதல் ஐந்து நாட்களுக்கு யாழ். கல்வி அலுவலக முகாமைத்துவ பயிற்சி நிலையத்தில் நடைபெறவிருக்கிறது. [ஒ-90]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், செப். 23

மணலாறில் நடந்து வரும் மோதலில் நேற்று விக்ரம் [செல்லத்துரை உதயகுமார் — மிருசுவில்], மனோஜ் [கண்டுமணி அருள் — மூதூர்] ஆகியோரும்—

சனியன்று நடந்த சண்டையில் சஞ்சுதா [சிவனேஸ்வரி இராமையா — வவுனியா] என்பவரும் வீரமரணமடைந்தனர். (ஒ)

## விமான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருத்தியமைக்க ஆளும் கட்சி முன்வந்துள்ளது என்றும், அதற்குப்பதிலாக ஜனாதிபதி மீதான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கும்படியும் எமக்கு ஆளும் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இத்தகைய உறுதிமொழிகளைக் கேட்டு ஏமாற நாம் தயாராக இல்லை.

நாடாளுமன்ற ஜனநாயக முறையை மீண்டும் அமுலுக்கு கொண்டுவர சர்வசனவாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும். இதனை ஆளும் கட்சியினர் முதலில் ஏற்க வேண்டும்.

எப்படியாயினும் செவ்வாயன்று நாடாளுமன்றம் கூடும்போது, ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளும்படி வலியுறுத்துவோம்.— இவ்வாறு திரு. அத்துலத்முதலி சொன்னார். (உ-எ)

## தியாகத் தேன்: 9

பச்சைத் தளிரொன்று
உச்சி வெயிலில்
உருமாறிக் கிடந்தது ...
குச்சி உடலின்
குருதிக் கலங்களில்
தமிழன் கனவை
இச்சையுடன் நிறைத்திருந்த
பச்சைக் கிளியொன்று
படுக்கையில் நெளிந்தது!

— வாஞ்சிநாதன்

(தியாகி திலீபன் நினைவாக)

# ஜி. சீ. ஈ. பரீட்சை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தப் பாடங்களுக்குரிய செய்முறைப் பரீட்சைகள் இன்னும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்முறை விஞ்ஞானம், கணிதம், கலை போன்ற பிரிவுகளில் பெறுபேறுகள் மந்தமாக உள்ளன. வர்த்தகப் பிரிவில் வழமையை விட சிறந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

பிரதான கல்லூரிகளில் கிடைக்கப்பெற்ற முக்கிய பெறுபேறுகள் வருமாறு:

**யாழ் இந்து**

★ கணிதம் — 4A ஒருவர் (எஸ். கிரிதரன்], 3AB — இருவர், 3AC ஒருவர், 2A2B, 2ABC தலா நால்வர்.

★ உயிரியல் — 3AB ஒருவர், 3AC இருவர்.

★ வர்த்தகம் — 2A2B ஒருவர்.

**சென். ஜோன்ஸ்**

★ கணிதம் — 3AB ஒருவர்.

★ உயிரியல் — 4A ஒருவர் [எஸ். லோகநாதன்], 3AB ஒருவர், 2A2B இருவர்.

★ வர்த்தகம் — B3C இருவர்.

**சுண்டுக்குளி**

★ உயிரியல் — 3AB ஒருவர், 2A2B இருவர்.

★ கலை, வர்த்தகம் — 3A ஒருவர் [ஒரு பாட முடிவு வெளிவரவில்லை.]

**வேம்படி**

★ கணிதம் — 4A ஒருவர் [நல்லதம்பி பிரேமச்செல்வி], 3AB ஐவர்.

★ உயிரியல் — 2A2B நால்வர்.

★ வர்த்தகம் — 4A மூவர் [கலைவதனி பொன்னம்பலம், தேன்மொழி தர்மலிங்கம், ரஜனி ராஜநாதன்], 2A2B ஒருவர், 2ABC இருவர்.

**யாழ். மத்திய கல்லூரி**

★ கணிதம் — 2ABC ஒருவர்.

★ உயிரியல் — 2B2C ஒருவர்.

★ வர்த்தகம் — AB2C, 2B2C, B3C தலா ஒருவர்.

**சென். பற்றிக்ஸ்**

★ கணிதம்—2A2B 2A2C தலா ஒருவர்.

★ உயிரியல் — AB2C ஒருவர், 3BC ஒருவர்.

★ வர்த்தகம் — 2A2B ஒருவர், A2BC ஒருவர், 3BC ஒருவர்.

★ கலை— AB2C ஒருவர்.

**திருக்குடும்ப கன்னியர் மடம்**

★ உயிரியல் — A2BC, AB2C, 3BC தலா ஒருவர்.

★ வர்த்தகம் — 3AB, 2ABC, 3BC, A2BC தலா ஒருவர், AB2C இருவர்.

**கனகரத்தினம் ம. ம. வி.**

★ கணிதம் — 2ACS ஒருவர்.

★ உயிரியல் — 2B2C ஒருவர்.

★ வர்த்தகம் — 2A2B, A3B தலா ஒருவர், 2ABC, A2BC, 2A2C, AB2C தலா ஒருவர்.

★ கலை—AB2C ஒருவர்.

**யாழ். இந்து மகளிர்**

★ கணிதம் — 2ABC, A2BC தலா ஒருவர், AB2C மூவர்.

★ உயிரியல் —AB2C இருவர், A3C, 4B, 3BC தலா ஒருவர்

★ வர்த்தகம் — 4A இருவர், (குலரஞ்சினி தர்மலிங்கம், பிரியதர்சினி பரமசுந்தரம்), 2A2B மூவர், A3B ஒருவர், 2ABC நால்வர்

★ கலை — 3AB இருவர், A2BC ஒருவர், 2ABC ஒருவர்

**கொக்குவில் இந்து**

★ கணிதம் — 3AB ஒருவர்.

★ வர்த்தகம் — 4A ஒருவர் (பா. வசீதரன்), 3AB ஒருவர்.

**உடுவில் மகளிர் கல்லூரி**

★ கணிதம் — AB2C ஒருவர்.

★ உயிரியல் — AB2C ஒருவர்.

★ வர்த்தகம் — 4A ஒருவர் (உமையாள் பாலசுப்பிரமணியம்), 3AB ஒருவர், 2A2B ஐவர்.

★ கலை — 2A2B ஒருவர், 2AB ஒருவர் (ஒரு பாட முடிவு வெளிவரவில்லை).

**மகாஜனா**

★ கணிதம் — 2ABS, ABCS, AB2C தலா ஒருவர்,

★ உயிரியல் — A2BC, AB2S தலா ஒருவர்.

★ வர்த்தகம் — 3AB, 3AC, A2BC தலா ஒருவர்.

★ கலை — 2AB (ஒரு பாடமுடிவு வெளிவரவில்லை) A3B, A2BC தலா ஒருவர்.

**ஹாட்லி**

★ கணிதம் — 4A ஒருவர் (பி. அன்பழகன்), 3AB, 3AC தலா இருவர்.

★ உயிரியல் — 4A ஒருவர் (வி. பி. மணிமோகன்)

★ வர்த்தகம் — 2A2B ஒருவர்.

**சாவகச்சேரி இந்து**

★ கணிதம் — 3AB ஒருவர்.

★ வர்த்தகம் — 2A2B ஒருவர்.

★ கலை — 3AB ஒருவர்.

யாழ் பாடசாலைகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்று, பின்னர் கொழும்பு மற்றும் பிற இடங்களில் விசேட பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளும் வெளிவந்திருக்கின்றன. (உ-3-5)

## பிரேமாவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் நண்பகல் ஒரு மணி முதல் 9 மணி வரையும் சபை அமர்வு இடம்பெறும்.

அன்றைய தினம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணை மீது விவாதம் நடைபெறும்.

இதேசமயம்—

நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி ஒழுங்குகள் அனைத்தையும் இடைநிறுத்தி வைத்து விட்டு, ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை மீது விவாதம் நடத்த வேண்டும் என்ற விசேட தீர்மானம் ஒன்று சபையில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டால் அன்றி—

நாளையோ, நாளை மறுதினமோ ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்கப்பட வாய்ப்பு ஏதுமில்லை என்று நாடாளுமன்ற விவகாரங்கள் பற்றித் [illegible]ாரங்கள் தெரிவித்தன. [உ-எ-த-3]

## பிரேமா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெளியிட்டார்.

விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி ஆயுதங்கள், வாகனங்கள், பணம் மற்றும் கருவிகள் வழங்கியது தொடர்பாகவும்—

ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்ட ஏனைய குற்றச்சாட்டுகள் தொடர்பாகவுமே ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பப்படவிருப்பதாக அவர் சொன்னார்.

இது தொடர்பாக பத்து முதல் பதினைந்து கேள்விகள் தயாரிக்கப் பட்டிருப்பதாக வேறு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி கேள்விகளில் இருந்து தப்பமுடியாது என்றும், அவர் தப்ப முயற்சிப்பது விரும்பத்தகாத காட்சியை உருவாக்கும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கருத்து வெளியிட்டன.

## ஷெல் வீச்சு!

மன்னார் மாவட்டம் நானாட்டான் இராணுவ முகாமில் இருந்து புதுக்கமம் கிராமத்தை நோக்கி நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அந்தோனி பீற்றர் (7 வயது) என்னும் சிறுவன் காயமடைந்தான். (ஒ-3)

## கிளைமோர் தாக்கு

திருகோணமலை மாவட்டம் நிலாவெளியில் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ரோந்து சென்று கொண்டிருந்த படையினர் மீது புலிகள் கிளைமோர் தாக்குதல் நடத்தினர். படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## ஐ. தே. க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லது வேறு விடயங்கள் சம்பந்தமான வாக்கெடுப்பில் தோல்வியடைந்தால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தல் ஒன்றுக்கு உத்தரவிட வேண்டும், அல்லது நாடாளுமன்றின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளவர் என்று தாம் கருதும் ஓர் எம்.பியை பிரதமராக ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்று அரசமைப்பு கூறுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி இப்போது விடுத்திருக்கும் அறிவிப்பு ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவில் சலசலப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிமாவோ பிரதமராக நியமிக்கப்படுவதை ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுவில் ஒரு பகுதியினர் கடைசி வரை ஏற்கப் போவதில்லை என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகையினால் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பினால் அதிருப்தியாளர் குழுவுக்குள்ளும், அக்குழுவுக்கும் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலும் கருத்து வேறுபாடு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல, தாங்கள் அதிருப்தியாளர் குழுவில் சேர்ந்து கொள்வது சிறிமாவோவை பிரதமராக்கும் செயலாகவே முடியும் என்பதை ஐ. தே. க வின் ஏனைய எம். பிக்களுக்கு தெளிவுபடுத்தவும் ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. [உ-எ]

## அமெரிக்க...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னுவ உதவியே கோரப்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

அகதிகள் விடயம் தொடர்பாக அமெரிக்காவிடம் உதவி பெறுவதற்கான வாய்ப்புகள் பற்றி அரசு ஆராய்வதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக வங்கி, சர்வதேச நாணய சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை நிர்வகிக்கும் குழுக்களில், ஸ்ரீலங்கா தொடர்பான விவகாரங்களின் போது அதிக ஒத்துழைப்பை வழங்கும்படி அமெரிக்காவை ஸ்ரீலங்கா அரச அதிகாரிகள் கேட்டுக் கொள்ள இருப்பதாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்காவில் நல்லெண்ண விஜயங்களை மேற்கொள்ளும் படியும் அமெரிக்க அதிகாரிகள் குழுக்களுக்கு ஸ்ரீலங்கா அரசு அழைப்பு விடுத்திருக்கிறது.

இதற்கிடையில்—

நால்வர் கொண்ட அமெரிக்கத் தூதுக்குழு ஒன்று கடந்த மாத இறுதியில் கொழும்பு வந்து அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த தின வாழ்த்து

★ செல்வன் வித்யாஷாகர் ★

(23 — 09 — 1991)

ஆவரங்காலைச் சேர்ந்த சிவானந்தராஜா - தேவிகா தம்பதிகளின் தவப்புதல்வன் வித்யாஷாகர் தனது முதலாவது பிறந்த தினத்தை உரும்பராயில் கொண்டாடுகிறார். இவரை சிவனருள்பெற்று சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமிமார், அத்தை, சித்தப்பாமார், சித்திமார், ஜெயந்தி, புஷ்பன், ரேகா, சஜீவன், நிருபா ஆகியோர் வாழ்த்துகிறார்கள்.

விநாயகர் ஸ்தாபனம்,

இல: 19, புத்தூர்.

(18224)


# கிட்டு சுவிஸில் தஞ்சம்

கொழும்பு, செப். 23

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) சுவிட்ஸர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியிருப்பதாக லங்காபுவத்தை ஆதாரங்காட்டி இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது.

பிரிட்டனில் இருந்து வெளியேறிய திரு. கிட்டு முதலில் பிரான்ஸுக்குப் போய்ச் சேர்ந்தார்.

பின்னர் அங்கிருந்து அவர் சுவிட்ஸர்லாந்துக்குச் சென்றார்.

அங்கு அரசியல் தஞ்சம் கோருவது அவரின் நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் இருந்து கிடைத்துள்ள செய்திகளின்படி சுவிஸில் உள்ள சுமார் பத்தாயிரம் ஈழத் தமிழ் அகதிகள் அங்கு அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருக்கின்றனர்.

பெருகி வரும் ஈழத் தமிழ் அகதிகளின் நடவடிக்கைகளினால் ஆத்திரமடைந்த சுவிஸ் மக்கள் இதுவரை இருபத்தைந்துக்கு மேற்பட்ட தடவைகள் ஈழ அகதிகள் தங்கியிருக்கும் விடுதிகள், ஹொட்டல்கள், முகாம்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றனர்.

# ராஜீவ் கொலைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கீகாரம் அதற்குக் கிடைத்தது என்பதையும் நிரூபிக்க போதுமான சான்றுகள் தங்களிடம் இருப்பதாகவும் புலனாய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ராஜீவ் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம் ஏதும் இல்லை என்று திரு. பிரபாகரன் அறிவித்திருப்பது—

''புலிகள் அப்பாவிகள் எனக் காட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட விகாரமான ஒரு முயற்சி'' என்றும் புலனாய்வுக் குழு தெரிவித்திருக்கிறது.

இதற்கிடையில்—

ராஜீவைக் கொல்வது சம்பந்தமான கொலையாளிகள் குழு யாழ்ப்பாணத்திலிருந்து கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் கரையோரத்தில் உள்ள கோடிக்கரையில் வந்திறங்கியது என்றும் புலனாய்வுக் குழு தெரிவித்தது.

மிராசுதாரர் சண்முகத்தின் விருந்தினர்களாக கோடிக்கரையில் தங்கிய இந்த 9 பேர் கொண்ட கொலையாளிகள் குழுவில், மனித குண்டாகப் பயன்பட்ட தனு மற்றும் சிவராசன், சுபா ஆகியோர் உட்பட ஐவர் உயிரிழந்து விட்டனர். ஏனைய நால்வரும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ராஜீவ் கொலையில் சதிகாரர்களின் தொடர்பு பற்றிய விவகாரங்களை நிரூபிக்கும் சிவராசனின் டயறி கைப்பற்றப்பட்டுள்ளது. அப்படி இருக்கையில் ராஜீவ் கொலையில் தமக்கு சம்பந்தமில்லை என்று புலிகளின் தலைமைப்பீடம் எப்படிக் கூறமுடியும்?

பல லட்சக்கணக்கில் பணம் யாழ்ப்பாணத்திலிருந்து எவ்வாறு பெறப்பட்டது என்பதை டயறி வெளிப்படுத்துகிறது!

கொலையில் சம்பந்தப்பட்ட சாந்தன் என்ற நபர் கைது செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கடந்த வருடம் ஜூனில் சென்னையில் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபாவையும் மற்றும் 13 பேரையும் படுகொலை செய்த கொலையாளி குழுவில் சாந்தனும் பங்கு கொண்டார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதிப் படை எடுத்த நடவடிக்கைகளால் எழுந்த உட்பகையே ராஜீவ் கொலைக்குப் பின்னணியாக இருந்த காரணமாகும்.

காவலில் இருக்கும் போராளிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் விசாரணையின்போது தெரிவித்த சாட்சியங்களின் இருந்து இது தெரியவருகிறது.

—இவ்வாறு 'இந்து' பத்திரிகை செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [உ-ள]


# யா/யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 23-09-91 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு தலைவர் K. N. இராசரத்தினம் தலைமையில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சங்க அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

★ நிகழ்ச்சிகள் ★

1. புதிய நிர்வாக சபைத் தெரிவு
2. 175 ஆம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் சம்பந்தமான ஆலோசனை.
3. புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல்.

செயலாளர்,

(18221) சிவனையா இரஞ்சன்


# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 31 — 08 — 1925

இறப்பு: 23 — 09 — 1990

## A. C. SELVARAJ

கடந்து விட்ட தாண்டு ஒன்றெம்
டடா நீங்கள் சென்றின்று
துடைத்தெடுத்தோம் கண்ணீரை
கடவுளோடு கண்டு கொண்டு!

Pushpam, Dilip, Shanthie.

Pushpa Cottage,
Puloly west, Puloly.

(சி-0446)

# நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



பிறப்பு: 19 — 12 — 1932

இறப்பு: 24 — 09 — 1993

திருமதி

## இம்மனுவல் யேற்றூட் [றீற்றா]

ஓராண்டும் ஓடி மறைந்ததம்மா!
ஓயாதனும் சேவை தன்னால்;
சீராகும் பெருவாழ்வைத் தந்தீர்!
சிந்தனையோ நினைவை இழப்பதில்லை!

வாழ்க்கை எனும்பெரும் சிலுவையை
வேட்கையோடு சுமந்ததாலே
தாழ்வில்லா நிலைமையைத் தந்தீரே
தாயேனும் நினைவுகள் மறப்பதில்லை!

இவரின் ஆன்ம சாந்திக்காக [24-09-1991] செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்கு புனித கார்மேல் மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குகொண்டு மன்றாடுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்;

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், மச்சான்மார், உறவினர்கள்.

28, மவுண் கார்மேல் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-0566)

# அந்தியேட்டி அழைப்பு



மலர்வு: 22 — 12 — 1927

உதிர்வு: 27 — 08 — 1991

## அமரர் மு. அ. தம்பிஐயா

(உரிமையாளர் லக்ஷ்மி ஸ்ரோர்ஸ் பொலநறுவ, சிவா அரிசி ஆலை நாவற்குழி, கைதடி.)

26-09-91 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும், அனுதாபம் தெரிவித்தோருக்கும், உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.

''குகநிதி'',
கைதடி நுணாவில், கைதடி.

(18206)


# அரசாங்க எழுதுனர் சேவை

**பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம்: 24-09-1991 — 2.30 மணி

Tuesdays
Wednesdays 2.30 — 5.00

விண்ணப்பப் பத்திரங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

[Spoken English வகுப்புகளும் நடைபெறுகின்றன.]

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

16, 3rd CROSS STREET,
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA.

(சி-0573)



# வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

## முக்கிய அறிவித்தல்

தியாகி திலீபனின் நான்காவது நினைவாண்டை முன்னிட்டு 25-9-91 புதன்கிழமை மாலை 3 மணிக்கு சகல சங்கங்களும் இணைந்து நடத்த உள்ள ஊர்வலத்தில் எமது இணைச் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு எமது காரியாலய முன்றலில் ஒன்றுகூடவும். அத்துடன் 26 ஆம் திகதி நல்லூரில் நடக்கவிருக்கும் சகல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும்படியும் வேண்டிக்கொள்கிறோம்.

·சமாச நிர்வாகம்.

1083, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(18227)


# மரண அறிவித்தல்

## பலசுப்பிரமணியக்குருக்கள் பஞ்சாட்சரக்குருக்கள்

ஸ்ரீ மங்கள மகாகாளி கோவில் பிரதம குரு முன்னை நாள் சமாதான நீதிவானும், ஆசுகவியும், ஆகம பிரவீண. ப. பஞ்சாட்சரக்குருக்கள் (21-9-91) சனிக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் லட்சுமி அம்மாவின் அன்புக் கணவரும், பலசுப்பிரமணியக்குருக்களின் அன்பு மகனும், தியாகராஜக்குருக்களின் அன்புத் தமையனாரும், மாவிட்டபுரம் அப்பாக்குருக்களின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 24-9-91 செவ்வாய்க்கிழமை 3 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

45/2, ஓடை லேன் ('ராதா லேன்')
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

(17931)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-09-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org